# தமிழன் என்று சொல்லடா... தலை நிமிர்ந்து நில்லடா...

முனைவர் **ப. முருககூத்தன்**
இணை ஆசிரியர்

இன்று நாகரீகம் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்ற பல நாடுகள் நாகரீகம் மற்றும் தொழில்நுட்பம் என்றால் என்ன என்பதை அறிவதற்கு முற்பட்ட காலத்திலேயே அவற்றில் சிறந்து விளங்கியது தமிழினம் ஆகும்.

ஆதிச்சநல்லூர் மற்றும் மதுரை கீழடி தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் தமிழன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சீரிய நகர நாகரீகத்தை கடைபிடித்ததையும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளதையும் உணர்த்துகிறது.

வெண்ணிக் குயத்தியார் என்ற பெண் புலவர் கரிகாற் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய புறநானூற்றுப் பாடல், காற்றின் சக்தியால் தமிழர்கள் கலம் (கப்பல்) செலுத்தியதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அந்த பாடல் வரிகளானது,

> “*நளியிடு முன்னீர் நாவாய் ஓட்டி*
> *வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!*
> *களியியல் யானைக் கரிகால் வளவ!*”

(புறநானூறு—பாடல் 68)

இந்த பாடல், வரிகள் கரிகாலன் ஆண்ட காலத்தைப் பற்றிக் கூடப் பேசவில்லை, அவனுடைய முன்னோர்களின் காலத்தில் காற்றின் விசையால் கப்பல்கள் விடப்பட்டதை புகழ்ந்து பேசுகின்றது.“வளவனே! உனது முன்னோர்கள் காற்று இயக்கும் திசையை அறிந்தே அதற்கான பொறிமுறைகளைப் பொருத்திக் கப்பல் செலுத்துமாறு செய்த அறிவாற்றல் உடையவர்கள். மதயானை மிகுந்த படைகளை உடைய கரிகால் வளவ!” என்று உரையாசிரியர்கள் இப்பாடல் அடிகளுக்கு பொருள் எழுதி வைத்துள்ளனர்.

தமிழர்களுக்கு இருந்த வணிகத் தொடர்பும் அதனால் பரிமாற்றத்திற்கு உள்ளான பண்பாட்டுத் தொடர்புகளும் தமிழர்களின் உள்ளங்களில் உயர்ந்த சிந்தனைகளை எழுப்பின. அத்தகைய சிந்தனையின் விளைவே கணியன் பூங்குன்றனாரின் “*யாதும் ஊரே யாவரும் கேளிர்*” என்ற தத்துவமாகும். எல்ல நாடுகளையும் வேறுபாடு இல்லாமல் தனது நாடாகவும், எல்லா இனத்து மக்களையும் வேறுபாடு கருதாமல் தனது உறவினர்களாகவும் கருதி மகிழ்ந்த பேருள்ளம் தமிழர்களுக்கு இருந்தது. இதனைப் போன்றே தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவர்களும்,

> *ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்* என்றும்
> *தன் உயிர் பெருக்கப் பிறிதின் உயிரைப் போக்கக்கூடாது* என்றும்
> *பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்* என்றும்
> *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்* என்றும்

பல உயர்ந்த தத்துவங்களை எடுத்துரைத்துள்ளார். இத்தகைய உயர்ந்த சிந்தனையையே நமது இலக்கியங்களான நக்கீரரின் திருமுருகாற்றுப்படை, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், பவணந்தி முனிவர் எழுதிய நன்னூல், சேக்கிழாரின் பெரியபுராணம் மற்றும் கம்ப இராமாயணம் ஆகிய அனைத்து நூல்களும் எடுத்துரைக்கின்றன.

சிந்தனையில் சிறந்து விளங்கிய தமிழினம் செயல் திறத்திலும் இன்றளவும் சிறந்து விளங்குகின்றது. காவிரியின் போக்கைக் கட்டுப் படுத்தி சோழ நாட்டின் வளம் பெருக்கியதாகப் பட்டினப் பாலையில் போற்றப்படும் கரிகாலனால் கட்டப்

பட்ட ''கல்லணை'', இராச இராச சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவில், கடாரம் கொண்டான் என்று பெயர் பெற்ற இராசேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவிலைப் போன்ற தொரு கோவில் மற்றும் இராமேஸ்வரம், சிதம்பரம், மதுரை, கும்பகோணம் ஆகிய நகரங் களில் கட்டப்பட்ட கோவில்கள், மாமல்லபுரம் கற்சிற்பங் கள், போகரால் உருவாக்கப்பட்ட பழனி முருகன் நவபாஷாண சிலை, கர்ம வீரர் காமராசரால் திறக்கப்பட்ட மாத்தூர் தொட்டிப் பாலம், மாமனிதர் அப்துல்கலாம் உருவாக்கிய ஏவுகணைகள் ஆகிய யாவும் தமிழர்களின் அறிவியல் மற்றும் பொறியியல் சாதனைகளுக்கு சான்றாகும்.

தமிழ் இலக்கண சான்றாம் தொல்காப்பியம் வழங்கிய தொல்காப்பியர், உலகப் பொதுமறை திருக்குறளை அருளிய தெய்வப்புலவர் திரு வள்ளுவர், பெண்ணினத்திற்கு பெருமை சேர்த்த ஆத்திச்சூடி வழங்கிய ஔவையார், தமிழில் இராமாயணம் வழங்கிய கம்பர், மகாகவி பாரதி யார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நம் காலத்து கண்ணதாசன், வைரமுத்து, நா. முத்துகுமார் போன்ற புலமை வாய்ந்த கவிஞர் களை உலகுக்கு தந்தது நம் தமிழகம் என்று சொல்வதில் நாம் பெரும் உவகையடையலாம்.

கொடைக்கு இலக்கணமாம் கடையெழு வள்ளல்களை வழங்கியது தமிழகம், வீரத்திற்கும் விவேகத்திற்கும் பெயர் பெற்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்களை வழங்கியது தமிழகம், இவர் ஒரு கற்பனை கதாபாத்திரமோ இயற்கையை ஒத்த பேராற்றல் பெற்றவரோ என அதிசயிக்கத் தோன்றும் ஏழைகளின் அறிவுக் கண் திறக்க மதிய உணவுத் திட்டம் கண்ட கர்ம வீரர் காமராசரை தந்தது நம் தமிழகம், இந்தியர் களின் வானியல் பலத்தை உலகுக்கு உணர வைத்த ஏவுகணை மனிதர் மாமேதை அப்துல் கலாம் ஆகியோரை தந்தது நம் தமிழகம். என் பார்வையில் நான் பார்த்து வியந்த இந்தியாவின் படிக வளர்ப்புத் தந்தை முனைவர் பெ. இராமசாமி, வலதுகரம் கொடுப்பதை இடதுகரம் அறியாது என்ற அளவில் உதவிக்கு இலக்கணமாம் முனை வர் ம. சற்குருமூர்த்தி, நவீன நிறமாலையியல் விஞ்ஞானி முனைவர் சேது. குணசேகரன், தான் வாழும் இடத்தை சிறப்பிடமாக்க வேண்டும் என்ற என்ற எண்ணம் கொண்ட முனைவர் ப.அருள் மொழிச்செல்வன் மற்றும் இல்லை என்ற சொல்லே தன் அகராதியில் இல்லை என்று சொல்லு மளவிற்கு அனைவரையும் அரவணைத்து செல்லும் முனைவர் இராம. செயவேல் ஆகி யோரைத் தந்ததும் நம் தமிழகமே.

பனையோலையில் பார்த்த தமிழ், கணிப் பொறியும் கண்ட தமிழாக இன்று வளர்ந்து நிற்கிறது.'முன்னம் பழமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்' உயர்ந் தோங்கி நிற்கும் நம் தமிழன்னையை வியந்து வணங்குகின்றேன். தமிழ் இனமே! நாம் முற் காலத்திலும் இக்காலத்திலும் தமிழால் சிறந்து விளங்குகின்றோம், எதிர்காலத்திலும் சிறந்து விளங்க தமிழே நமக்கு வழிகாட்டும் என்ற உயரிய நோக்கினை அடைவதற்கு ஏதுவாக தமிழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி சஞ்சிகையை உருவாக்கிய பெரும் மனம் படைத்த இளைஞர்களான முனைவர் மு. அறி வானந்தன் மற்றும் முனைவர் மா. சீனிவாசன் ஆகியோரை எண்பது நாடுகளில் சிறந்து வாழும் தமிழ் கூறும் நல்லுலகமும் நினைவுகூறும் என்று என் உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக் கின்றேன்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியின் 175–வது வருட கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஹேவிளம்பி வருடம் தைத்திங்கள் 27–28, (பிப்ரவரி 9–10, 2018) ஆகிய தேதிகளில் மூதறிவியல் மற்றும் ஆராய்ச்சி இயற்பியல் துறை நடத்தும் அண்மை மூலப்பொருட்களின் இயற் பியல் பண்பாய்வு பற்றிய தேசிய கருத்தரங்கின் [National Conference on Recent Trends in Physics of Materials (NCRTPM-2018)] சிறப்பு இதழாக வரவிருக்கும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி சஞ்சிகையின் (இரண் டாவது இதழ் ) முகப்புரையை எழுத எனக்கு வாய்ப்பளித்த அதன் நிர்வாகிகளுக்கும் இள வேனில் அமைப்பினருக்கும்என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

வாழ்க தமிழ்!! வளர்க தமிழினம்!!

நன்றி, வணக்கம்.